ISSN 2320-4842 (P)

ISSN 2320-4842

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

அரிமா நோக்கு
18:3 அக்டோபர் 2024

ஆசிரியர்
ஈரோடு தமிழன்பன்
இணையாசிரியர்
வ. ஜெயதேவன்
ஆசிரியர் குழு
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
எஸ். ஏ. சங்கரநாராயணன்
அறிவுரைக் குழு
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

பதிப்பாளர்
இரா. பன்னிருகைவடிவேலன்
259 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை, பழைய மகாபலிபுரம் சாலை, கொட்டிவாக்கம், சென்னை 600 096
arimaanokkuu@gmail.com
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

| | |
|---|---|
| பைந்தமிழ் பழகுவோம்... முனைவர் ச. திருநாவுக்கரசு | 5 |
| பதிற்றுப்பத்தில் மனிதநேயக் கூறுகள் - முனைவர் ரா. சங்கரி | 9 |
| நா. முத்துக்குமார் திரையிசை பாடல்களில் அணி அழகு - கு. பேபி ஷாலினி | 14 |
| அழகரடிகள் வாழ்வும் படைப்பும் - கு. அமர்நீதி | 18 |
| சிவப்பிரகாசர் கையாண்ட சேக்கிழார் - உ. சிவசுப்ரமணியன் | 23 |
| சங்க காலமும் வாணிகப் பொருட்களும் - ஆ. பரத் | 26 |
| பதினெண் கீழ்க்கணக்கில் ஒழுக்கமுடைமை - நீ. காஞ்சனா | 30 |
| புறநானூற்று 235ஆவது பாடல் வடிவ கட்டமைப்பு குறித்த உரையாடல் - முனைவர் அ. சதீஷ் | 35 |
| கந்தர் அலங்காரத்தில் அறநெறிக் கோட்பாடுகள் முனைவர் ஏ. கோதண்டராமன் | 44 |
| பாரதியும் தொல்காப்பியரும் - திரு. இரா. குமார் | 50 |
| பொன்முடியார் போற்றும் மறக்குடி மாண்புகள் - சு. லட்சுமி | 57 |
| வெள்ளிவீதியார் பாடல்களில் தலைவி - கோ. பத்மவிலாசினி | 62 |
| வள்ளுவர் காண விரும்பிய உலகம் - ம. தாமரைச் செல்வி | 67 |
| சிவப்பிரகாசர் இலக்கியத்தில் பன்முகச் சிந்தனைகள் முனைவர் ஞா. சுபஸ்ரீ | 71 |
| சிவப்பிரகாசர் பனுவல்களில் விருத்தத்தின் ஆட்சி ந. அய்யனார் | 75 |
| தொல்காப்பியமும் ஈர்ப்பு விதியும் - உ. பிரபாகரன் | 81 |
| ஐங்குறுநூற்றில் தோழி கூற்று - சு. சிவசங்கரி | 87 |
| அரிமதி இளம்பரிதி படைப்புகளில் சமுதாயம் - இரா. பாஸ்கரன் | 91 |
| தொல்காப்பிய மரபியல் நோக்கில் ஆண்பாற் பெயர்கள் - வி.நந்தகுமார் | 94 |
| காலந்தோறும் வழிபாட்டு முறைகள் - எ. கல்விதாசன் | 101 |
| சங்கம் மருவிய கால நட்பும் வாழ்வும் - ந. முத்துகுமார் | 106 |
| தொல்காப்பியரின் உள்ளுறைக் கோட்பாடும் பதினெண் கீழ்க்கணக்கு அகநூல்களும் - த. விக்னேஷ்வரன் | 109 |
| கவிஞர் எழிலவனின் வாழ்வியல் - சி. ஆர்த்தி | 113 |
| எட்டுத்தொகை அக இலக்கியதில் மன்னனும் வீரமும் - ச. லீமா | 118 |
| சங்ககால மகளிரின் மனையற மாண்புகள் - கோ.மீனாட்சி | 123 |
| பதிற்றுப்பத்தில் வழிபாட்டு நெறிகள் - சி. சரிதா | 127 |
| மணிமேகலை காப்பியத்தில் உயிர் இரக்கம் - கி. மரகதவள்ளி | 131 |
| கானவர்களின் உணவு பழக்க வழக்கங்கள் திருமதி ஆ. கிரேஸி ஜெனோவா | 136 |
| எழுத்துடை நடுகல் - பெ. சண்முகவடிவேல் | 142 |
| கலித்தொகையில் காணப்படும் இயற்கை - ப. சாந்தி | 146 |
| அருச்சுனன் தபசு: மாற்று கதையாடலும் கூத்து நிகழ்வும் - பெ.செல்வம் | 150 |
| பல்லவர் வரலாற்றில் மகேந்திரவர்மன் குடவரைக்கோயில்கள் - இ. கமலக்கண்ணன் | 154 |
| இராஜபாளைய வட்டார நாட்டுப்புற தெய்வங்கள் மற்றும் வழிபாடு ரா.கவிதா - முனைவர் ம. பிரகாஷ் | 158 |
| தமிழ் மலையாள நாட்டுப்புறப்பாடல்களில் திணைக் கோட்பாடு முனைவர் பிரிதா செ | 163 |

ISSN 2320-4842

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

அரிமா நோக்கு
18:3 அக்டோபர் 2024

*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்
*இணையாசிரியர்*
வ. ஜெயதேவன்
*ஆசிரியர் குழு*
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
எஸ். ஏ. சங்கரநாராயணன்
*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்
*பதிப்பாளர்*
*இரா. பன்னிருகைவடிவேலன்*
259 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை, பழைய மகாபலிபுரம் சாலை, கொட்டிவாக்கம், சென்னை 600 096
arimaanokkuu@gmail.com
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

சிலப்பதிகாரத்தில் ஆடற்கலையில் அணிகலன்களின் பயன்பாடும்
முனைவர் அ. மகபுபூ 168

வேளாண் கருவிகள்
முனைவர் வெ. பரிமளம் 173

Folklore in the Era of Artificial Intelligence: Preservation, Transformation, and Challenges
Dr. Jisha C.K - Shidin A 176

ஒப்பியல் நோக்கில் இலக்கியக் காஞ்சி நகர வடிவமும் சாஸ்த்திரம் கூறும் நகர வடிவமும் ஒரு பார்வை
முனைவர் த. தட்சணா மூர்த்தி 183

நா.முத்துக்குமார் படைப்புகளில் கிராமத்து அழகியல்
கி. பிரபா - முனைவர் ரோ. க. கேதறின் பிறீடா 187

**Published on 14, December -2024** **ISSN:2320-4842 (P) 3049-2688 (O)**

# நா.முத்துக்குமார் படைப்புகளில் கிராமத்து அழகியல்

**கி. பிரபா,** முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவு எண்: 23113164022024
**முனைவர் ரோ. க. கேதறின் பிறீடா**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வு மையம்
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிஷேகப் பட்டி
திருநெல்வேலி 627 012

## முன்னுரை

கிராமங்கள் பல்லுயிரின சூழியல் மிகுந்ததாகவே காணப்படுகின்றன. கிராமத்து இயற்கையின் அலாதியான அழகை, இயற்கையோடு இயைந்த மக்கள் வாழ்வியலை தனது பல படைப்புகளில் நா. முத்துக்குமார் வருணனையாகவும். சம்பவங்களாகவும் விவரித்திருக்கிறார். காஞ்சிபுரத்தை அடுத்த கள்ளிகாபுரம் என்கிற அவரது பிறந்த ஊர். ஊரைச் சுற்றிய வயல்கள், பாய்ந்தோடும் நீரோடைகள், குளங்கள், கால்நடைகள், கிராமத்தின் மையநாதமான கோயில்கள் என இவற்றை வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் தொடர்ந்து வருணித்துக்கொண்டே செல்கிறார். இயற்கை மீதான துல்லியமான வர்ணனை அவரது கிராமியக் காதலை வெளிப்படுத்துகிறது. கிராமத்து ஊர்களைச் சுற்றி நண்பர்களோடு நடப்பதும், இரவின் நிலவொளியில் கதைபேசி மகிழும் கிராமத்து பெரியவர்களும், விளையாடி மகிழும் குழந்தைகளும், கிராமத்து மக்களின் இயற்கையோடு இயைந்த பொழுதுபோக்குகளும், வேலைகளும் நா. முத்துக்கமார் படைப்புகளில் அழகியலாக வெளிப்படுகின்றன. கிராமங்கள் தற்காலத்தில் தனது தன்மையை இழந்து நகரமயமாகிவிட்டபோதிலும் அதன் பழைய அழகியல் நா. முத்துக்குமார் படைப்புக்கள் வாயிலாக வெளிப்படுத்துவதை இக்கட்டுரையில் காணலாம்.

## நா. முத்துக்குமார்

நா.முத்துக்குமார் திரைக்கவிதைகளுக்காக குறுகிய காலத்தில் இரண்டு தேசிய விருதுகளைப் பெற்றவர். 1990களின் இறுதியில் கவிதைகள் எழுதத்துவங்கியவர். இரண்டாயிரம் ஆண்டுகளின் ஆரம்பகாலத்தில் தமிழ் திரைப்படங்களில் பாடல் எழுத ஆரம்பித்து தமிழ் திரையிசைக் கவிஞராக ஆதிக்கம் செலுத்தியவர். தமிழ் சினிமாவின் திரைக்கவிதைகளில் புகழ்பெற்ற வாலி, வைரமுத்து ஆகிய பெருங்கவிஞர்கள் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் அறிமுகமாகி குறுகிய காலத்தில் அவர்களுக்கு இணையான புகழைப் பெற்றவர். நா. முத்துக்குமாரின் பெரும்பாலான திரைப்பாடல்கள் வெற்றி பெற்றன.

நா. முத்துக்குமார் காஞ்சிபுரம் அருகில் உள்ள கன்னிகாபுரம் என்ற கிராமத்தில் 1975ஆம் ஆண்டு பிறந்தவர். சிறுவயதில் தாயை இழந்து தந்தையின் பராமரிப்பில் வளர்ந்தவர். உடன் பிறந்த தம்பி ஒருவரும் உண்டு. ஜீவலட்சுமி வாழ்க்கைத்துணைவி. ஆதவன் என்ற மகனும் யோகலட்சுமி என்ற மகளும் உண்டு.

கிராமத்து பள்ளிக்கூடத்தில் பள்ளிக்கல்வியை முடித்த பின்னர். காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை இயற்பியல் பட்டமும், பின்னர் தமிழ் மீது ஏற்பட்ட ஈர்ப்பினால் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முதுகலை தமிழ் இலக்கியப்பட்டமும், சென்னை பல்கலைக்கழகத்தில் திரைப்பாடல் ஆய்வுக்காக முனைவர் பட்டமும் பெற்றவர். ‘தங்க மீன்கள்’ மற்றும் ‘சைவம்’ ஆகிய திரைப்படங்களின் பாடல் வரிகளுக்காக இந்திய அரசின் உயரிய விருதான தேசிய விருதினை இருமுறை பெற்றவர். தமிழக அரசின் சிறந்த பாடலாசிரியருக்கான விருதினையும், பீலிம்பேர் விருதுகளையும் பெற்றுள்ளார்.

திரைப்பாடல்களில் கோலோச்சிய நா. முத்துக்குமார் பல கவிதை நூல்களையும் கவிதை சார்ந்த கட்டுரை நூல்களையும் எழுதியுள்ளார். அவர் எழுதிய ‘அணிலாடும் முன்றில், பட்டாம் பூச்சி விற்பவன், கண் பேசும் வார்த்தைகள்’ உட்பட பத்துக்கும் மேற்பட்ட நூல் தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. தமிழ் கவிதை இலக்கியத்தில் அதிக்கம் செலுத்தத் துவங்கிய காலத்திலேயே மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப் பட்டு 2016ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தனது 41ஆம் வயதில் மரணமடைந்தார்.

## கிராமத்து வாழ்வியல்

முத்துக்குமார் தமிழகத்தின் தலைநகரான சென்னைக்கு அருகிலுள்ள மாவட்ட மான காஞ்சிபுரத்தில் பிறந்து வளர்ந்தவர். அவர் சிறுவணய் வாழ்ந்த கிராமத்துச் சூழலைப் பிந்தையகால பெருநகரின் வாழ்க்கையில் இனிமையான நினைவு களாகக் கவித்துவமாக அசை போடுகின்றார். கிராமத்து வாழ்வியல் நகரச் சூழலிலிருந்து முற்றிலும் மாறு பட்டது. அங்கே உறவினர்களின் நெருக்கமும் கூட்டுக்குடும்ப பிணைப்பும் காணப்படும். நா.முத்துக்குமார் கிராமத்து வாழ்க்கையின் முதல் அழகியலாகக் காணப்படும் உறவுகளின்

பிணைப்பை இவ்வாறு கூறுகிறார். “கிராமம், பாட்டிகளின் சுருக்குப்பையில் உள்ள சில்லறைகளைப் போன்றது. சுருக்குப் பைகளின் உலகம் வேறு உலகம். அதன் முடிச்சுகள் பிரியங்களால் ஆனவை. காலத்தின் இடுப்பில் அதே பழைய வாஞ்சையுடன் நிராதரவாய்த் தொங்கிக்கொண்டிருப்பவை. அதன் எளிமையும், அழகும், எந்த விதத்திலும் நம்மை நோக்கிச் சவால் விடாதவை.” என்கிறார். கிராமத்து மக்களின் எதாரத்த வாழ்விலிருந்துதான் இயற்கையின் அழகும் நீட்சி பெறுகிறது. அவர்கள் வளர்க்கும் கால்நடைகளும், பறவைகளும்.

பூச்செடிகளும் இயற்கையின் அழகினை வலிமையாக்குகின்றன. சமயங்களில் பிரிய முடியாத பிணைப்பாகவும் கிராமத்து இயற்கையும் உறவுகளும் அமைகின்றன. சில நேரங்களில் கிராமத்து அழகியல் சூழலினால் ஏற்படும் பிரிவுகளால் வலிமிகு உணர்வாகவும் வெளிப் படுவதைக் காணலாம்.

"முன்வாசலில் தொங்கும் குரோட்டன்ஸ் செடி கடந்து பிஞ்சு வெண்டைகள் பொறுக்கி: கூர்முனை ஒடித்து: தள்ளு வண்டிக்காரனிடம் பேரம் பேசுகையில் இப்போது உணர்கிறேன்…

ஒவ்வொரு வெண்டைக்காயிலும் ஒளிந்தி ருக்கிறார்கள் மென்மையான விரல் கொண்ட ஒரு அம்மா:

**கனவுகள் விரியும்**

**ஒரு அக்கா:**

**கைகள் நடுங்கும் ஒரு தந்தை;**

வெண்டைக்காயில் ஒளிந்தவர்கள்' எனும் தலைப்பில் நா. முத்துக்குமார் எழுதிய இந்த கவிதையில் சொந்தவீட்டில் கிணறு வைத்து வாழும் கிராமத்து வாழ்விலி ருந்து கடன் பிரச்சினையினால் வீடும் கிணறும் விற்கப்பட்ட ஒருவனின் புலம்பலாய் மாறுகிறது. கிணற்றடி நீரில் வளரும் வெண்டையின் காய்களைப் பறித்து புசித்தவர்கள் வீட்டை இழந்த

பின்னர் தள்ளுவண்டிக்காரனிடம் வெண்டைக் காய்க்காகப் பேரம் பேசும் அவலம் சொல்லப்படுகிறது.

கிராமத்து வாழ்வியலின் சிறு துன்பவியல் நிகழ்வுகளும் இதுபோன்று கவித்துவமாக அமைவதை நா.முத்துக்குமார் படைப்பு களின் வாயிலாகக் காணலாம்.

**ஈசல் வேட்டை**

கிராமத்து வாழ்வியலில் விலங்குகளும் பறவைகளும் முக்கியப் பங்காற்றுகின்றன. காடுகளில் மிருகங்களோடு கலந்து வாழ்ந்த ஆதிமனிதனின் வேட்டையாடும் குணநலன் கிராமத்து மக்களிடமும் தொடருகிறது. கிராமங்களை அடுத்து காணப்படும் சிறு காடுகள். மலைக் குன்றுகள். புதர்கள் போன்றவற்றில் வாழும் முயல்கள். காட்டுக்கோழிகள் போன்றவற்றை வேட்டையாடும் வழக்கம் தமிழகக் கிராமங்களில் காணப்படுகிறது. ஆனால் நா.முத்துக்குமார் ஒருநாள் மட்டுமே உயிர்வாழும் ஈசல் எனும் பூச்சியை வேட்டையாடும் கிராமத்து அழகியலைக் கவிதையாக்கியிருக்கிறார்.

“காடா விளக்கும் கொஞ்சமே கொஞ்சூண்டு குழந்தை குதூகலமும் போதும் ஈசல் வேட்டையாட வறட்டி தட்டுவதற்கு சாணம் கொட்டி வைத்த நிலத்தில் ஈசல்குழிகள் ஏராளமிருக்கும்.

கூளத்திற்காய் குவித்த வைக்கோல் துணுக்குகளில் முளைவிட்டிருக்கும் நெல்மணிகளை மிதிக்காமல் நெருங்கி, கண்ணாடி ரெக்கைகள் உள்ளங்கையில் குறுகுறுக்க கொத்தாகப் பிடிப்போம் அந்தியில் பறக்கும் ஈசல்களிடமிருந்து அடைமழைக்கான சாட்சியங்கள் தேடும் வயதைத் தொலைத்து: நதியில் நனைந்த பாதங்கள் நகரத்திற்கு வந்து நாளாயிற்று

பொரி அரிசியுடன் கலந்து அம்மா வறுக்கும் ஈசல்களின் ருசி மதுரை முனியாண்டி விலாஸ் ஓட்டலின் சமையலறைக்குக் கூட புலப்படாதது எனப் பெருமிதமாகக் கூறுகிறார். ஈசல் வேட்டையானது உணவுக்கானது எனினும் அது கிராமத்து வாழ்வின் மகிழ்வான தருணத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

**கிராமத்து அழகியல்**

நகரமயமாகாத அன்றைய கிராமங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகளோ இணையதளமோ இல்லை. சிறுவர்கள் தங்கள் விடுமுறைத் தினங்களை விளையாடி தான் கழிப்பர். இதனால் பலவகை குறுவிளையாட்டுக்களும் கிராமத்து இயற்கையோடு இணைந்த அழகியலாகக் காணப்பட்டன.

“பூவரசம் இலையிலே பீப்பி செஞ்சி ஊதினோம் பள்ளிக்கூடப் பாடம் மறந்து பட்டாம்பூச்சி தேடினோம் தண்ணிப் பாம்பு வரப்பில் வர தலைதெறிக்க ஓடினோம்

பனங்காயின் வண்டியில் பசுமாட்டுத் தொழுவத்தை சுற்றிவந்து பம்பாய்க்குப் போனதாகச் சொன்னோம்.

**அடடா வசந்தம்**

**அதுதான் வசந்தம்|**

**மீண்டும் அந்தக் காலம் வந்து மழலையாக மாற்றுமா?”**

அன்றைய சிறுவர்கள் போட்டி பொறாமை இன்றி கிராமத்து தெருக் களிலும் ஆறுகளிலும் இயற்கையின் துணை கொண்டு விளையாடி மகிழ்ந்ததை நா.முத்துக்குமாரின் இப் பாடல் உணர்த்துகிறது. பனைமரத்தின் பனங்காயில் செய்யப்படும் வண்டிகள் தான் அக்காலத்து சிறுவர்களின் ஊர்சுற்றும் வாகளம், அதை உருட்டிக் கொண்டே பல நகரங்களுக்கும் பயணிப் பதாய் கற்பனைச் செய்து விளையாடி மகிழ்வர். அந்த வசந்தகாலம் மீண்டும் வந்து மாற்றுமா? எனும் கேள்வியினால் தனது ஏக்கத்தையும் கவிஞர் வெளிப் படுத்துகிறார்.

பெரும்பாலான தமிழகக் கிராமங்களில் ஆறு, குளம், குட்டை போன்ற இயற்கை நீர்நிலைகள் காணப்படும். இவை இல்லாதபட்சத்தில் தோட்டங்களுக்கு நீர்பாய்ச்சும் பெரியகிணறுகள் காணப்

படும். இவற்றில் நீந்தி குளிப்பது கிராமத்து மனிதர்களுக்கு சுகானுபவம். இந்த நிரநிலைகளில் தண்ணீர் வற்றும் காலங் களில் மீன்களைப் பிடிப்பதற்கு சிறுவர் களுக்கும் கொக்குகளுக்கும் போட்டியே நடைபெறும், தண்ணீர வற்றிய தடங் களில் நடந்து செல்லும் வாத்துக்களின் கால் அடையாளத்தை நட்சத்திரங் களுக்கு ஒப்பீடு செய்கிறார் கவிஞர்.

“நீரில்லா ஆற்றில் வாத்துக்கள் விட்டுச் சென்ற நட்சத்திரக் கால்பதிவை அழிக்காமல் பின் தொடர்வோம்.”

வாத்துக்குள் விட்டுச்செல்லும் நட்சத்திர வடிவ கால்தடங்களை அழிக்காமல் செல்லும் கிராமத்து சிறுவர்களின் ரசனையும் அழகியல் சார்ந்ததே ஆகும். இயற்கையோடு இணைந்து வாழும் கிராமத்தவர்களுக்கு இயற்கையின் அழகினைப் பாதுகாக்கும் தன்மையும் இயல்பாக வருவதை இக்கவிதையின் வாயிலாகக் காணலாம்.

## முடிவுரை

கிராமங்களின் இயற்கையும் அதுசார்ந்து வாழும் மனிதர்களின் வாழ்வியலும் அழகானது. கிராமங்களின் அழகியல் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுவதை நா.முத்துக்குமார் தனது கவிதைகளின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளமையை இக்கட்டுரையில் காணலாம். குடும்பம் உறவுகள் சார்ந்த உணர்வுகள் மெலிதானவை அவை இயற்கையுடன் இரண்டறக் கலந்து காணப்படுவதை வெண்டைக்காய் பற்றிய கவிதையில் அறிய முடிகிறது. கிராமத்து மனிதர் களின் வேட்டை உணர்வு அலாதி யானது. அதிலும் யாரும் சொல்லாத ஈசல் வேட்டையைப் பற்றி நா.முத்துக் குமார் அழகான கவிதையாக்கியிருப்ப தையும் காணலாம்

இறுதிவரையிலான கிராமத்துச் சிறுவர் களின் எதார்த்தமான இருபதாம் நூற்றாண்டின் விளையாட்டுக்கள் சார்ந்த வாழ்வியலைத் தனது அனுபவங் களின் வாயிலாகக் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளமையைக் காணலாம். நீர்வற்றிய குளத்தில் நடந்துசெல்லும் வாத்துக்கள் விட்டுச்செல்லும் கால்தடம் நட்சத்திரமாகிறது. அதை அழிக்காமல் பின்தொடரும் சிறுவர்கள் கிராமத்தின் அழகியலின் பாதுகாவலர்களாகின்றனர். இவ்வாறாக நா. முத்துக்குமார் கவிதை களில் கிராமத்து அழகியல் வெளிப் பட்டுள்ளமையை இக்கட்டுரையின் வழியாக அறிந்துக்கொள்ள முடிகிறது.

## துணை நின்ற நூல்கள்

1. நா. முத்துக்குமார், கிராமம் நகரம் மாநகரம், டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை—78, பக்.15
2. நா. முத்துக்குமார், நியூட்டனின் மூன்றாம் விதி, டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை. பக்.19
3. மேலது, பக்.26
4. நா.முத்துக்குமார். கண்பேசும் வார்த்தைகள், டிஸ்கவரி புக்பேலஸ். பக். 26
5. நா.முத்துக்குமார். பட்டாம்பூச்சி விற்பவன், டிஸ்கவரி புக்பேலஸ், பக் 51